Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 71 | சனிக்கிழமை 05 பெப்ரவரி 2022 | தை 23 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=




"அவிங்ர ஆட்சியே இஞ்ச ததிங்கிணத்தோம் ஆடிக் கொண்டிருக்கு. அதுக்குள்ள ஒற்றையாட்சியைப் பாதுகாக்கிறது எப்பிடியாம்...?"



# இலங்கையின் சுதந்திரநாள் தமிழர் தேசத்தின் கரிநாள்!

## முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நேற்று முழக்கம் வட்டுவாகல்வரை தீப்பந்தப் பேரணி

முல்லைத்தீவு, பெப்ரவரி 5

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினமான நேற்றைய தினத்தை, 'கரிநாள்' என்று அறிவித்து முல்லைத்தீவு-முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நேற்றுப் பெரும் போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது. 15 ➤

## குருந்தூர்மலையில் நேற்று கூட்டமைப்பு உள்நுழைவு!

முல்லைத்தீவு, பெப். 5

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினமான நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முல் 15 ➤

ஏப்ரல் 4ஆம் திகதியின் பின்

## தடுப்பூசி பெறாதோருக்கு பொது இடங்களில் தடை

*வெளியானது வர்த்தமானி*

கொழும்பு, பெப். 5

கொரோனாத் தடுப்பூசியைப் பெறாதவர்கள் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதிக்குப் பின் 15 ➤



## மைதானத்தில் 20 பேர் மயங்கிச் சரிந்தனர்!

*வவுனியாவில் நேற்றுப் பரபரப்பு*

வவுனியா, பெப். 5

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கையின் சுதந் 15 ➤

## தமிழர்களின் நெஞ்சில் போராட்டத் தீ எரியட்டும்!

*முள்ளிவாய்க்காலில் நேற்றுப் பிரகடனம்*

முல்லைத்தீவு, பெப். 5

எமது உரிமையைப் பெறும் சாத்வீக போராட்டமானது தமிழ் உணர்வாளர்கள், பற்றுள்ளவர்கள் அனைவராலும் வளர்ப்பிக்கப்பட்டு, பெரும் நெருப்பாக தமிழர்கள் நெஞ்சிலே 15 ➤



## ஒற்றையாட்சியை பாதுகாப்பேன்!

*இலங்கையின் சுதந்திரநாளில் கோத்தாபய மீண்டும் சூளுரை*

கொழும்பு, பெப். 5

எதிர்காலச் சந்ததிக்காக வென்றெடுத்த சுதந்திரத்தை எப்பொழுதும் பாதுகாப் 15 ➤

## கடலுக்குள் இறங்கி கறுப்புக் கொடிப் போர்

*போராட்ட வடிவத்தை மாற்றினர் மீனவர்கள்*

யாழ்ப்பாணம், பெப். 5

வடமராட்சி மீனவர்கள் தமது போராட்ட முறையை மாற்றி, கடலில் இறங்கி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தும், வடமராட்சி கிழக்கு மீனவர்கள் 14 ➤





மீனவர்களுக்கு ஆதரவாக

## ஜனாதிபதி செயலகம் விரைவில் முற்றுகை!

*சீலரத்ன தேரர் மீனவர்களிடம் உறுதியளிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 5

வடக்கு மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால், மீனவர்களையும் அழைத்துக்கொண்டு 15 ➤

மீனவர்களின் போராட்டம்

## டக்ளஸ் உடனடியாக பதவி விலகவேண்டும்!

*சீலரத்ன தேரர் அழுத்தம்*

யாழ்ப்பாணம், பெப். 5

மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியாத மீன்பிடித்துறை அமைச்சர் எங்களுக்குத் 14 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாடு இருக்கும் நிலையில்

# பில்லியன் ரூபா செலவில் சுதந்திரநாள் கொண்டாட்டம்

### இது அவசியமா என்று கேள்வி எழுப்புகிறது எதிர்க்கட்சி

**கொழும்பு, பெப். 5**

**இலங்கையின் சுதந்திர நாள் கொண்டாட்டத்தில் வான வேடிக்கைக்காக பறக்கும் விமானங்களுக்கு எவ்வளவு எரிபொருள் விரயமாகும்? பல நாள்களாக முன்னெடுக்கப்படும் இலங்கையின் சுதந்திர நாள் ஒத்திகை நடவடிக்கைகளுக்கான செலவினங்களை நாட்டினால் சுமக்க முடியுமா? இவ்வாறு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.**

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

74ஆவது சுதந்திரதினத்தை கொண்டாடும் இந்த தருணத்தில் நாம் அனுபவித்த அனைத்து சுதந்திரங்களையும் இல்லாமற் செய்த நாட்டையே அரசு உருவாக்கியுள்ளது. இவ்வாறான நெருக்கடிமிக்க சந்தர்ப்பத்தில் கோடிக்கணக்கில் செலவிட்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் மாபெரும் உற்சவம் நடத்துவதானது, மக்கள் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் நாட்டுக்குள்ள சவால்களை புறந்தள்ளும் செயலாகும்.

சுதந்திரதினக்கொண்டாட்டத்தில் வானவேடிக்கைக்காக பறக்கும் விமானங்களுக்கு எவ்வளவு எரிபொருள் விரயமாகும்? பல நாள்களாக முன்னெடுக்கப்படும் சுதந்திர தின ஒத்திகை நடவடிக்கைகளுக்கான செலவினங்களை நாட்டினால் சுமக்க முடியுமா?. டொலர் இல்லாத காரணத்தால் எரிபொருள் கப்பல்கள் நடுக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அத்தியாவசிய உணவுப்பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத் தில் சிக்கிக் கொண்டுள்ளன.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காத அரசு, மக்கள் அனுபவிக்காத சுதந்திரத்தைக் கொண்டாடுவதற்கு பில்லியன் கணக்கில் செலவிடுவதை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது - என்றுள்ளது. (ஒ-5)



## மயிலிட்டி துறைமுகத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.5

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறு கோரி, மயிலிட்டி துறைமுகத்திலும் மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் பரவலாக இடம்பெற்றுவரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து, மயிலிட்டி மீனவ சமூக அமைப்புக்கள் போராட்டத்தை ஏற்பாடு செய்தன.

துறைமுகத்துக்கு வெளியில் வாயில் கதவை அடைத்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராகவும் மீனவர்கள் கோஷங்களை எழுப்பினர். (ஒ-4-23)

## அந்தனிபுரம் மீனவர்களும் போராட்டம்

யாழ்ப்பாணம்.பெப்.5

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு அந்தனிபுரம் மீனவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை முதல் மீனவர்கள் குடும்பங்களுடன் சேர்ந்து கறுப்புக் கொடி கட்டி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-4-27)



## சந்தையில் திருட்டு 2 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம்.பெப்.5

திருநெல்வேலி பொதுச்சந்தையில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக திருட்டில் ஈடுபட்டவர்களை, பொது மக்கள் கையும் மெய்யுமாக பிடித்து, கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இருவரும் திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-23)

## இலங்கையின் சுதந்திர நாளில் பல்கலையில் கறுப்புக்கொடி

யாழ்ப்பாணம், பெப். 5



யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. இலங்கையின் சுதந்திர நாளான நேற்று இந்தக் கொடி ஏற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர நாளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சிவில் சமூகங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் முள்ளிவாய்க்காலில் நேற்று இடம் பெற்றது. அதில் பங்கேற்கும் பல் கலைக்கழக மாணவர்கள் தங்களது வாகனங்களை பல்கலைக்கழக வளாகத்தினுள் விட்டுச் செல்ல முற்பட்டுள்ளனர். பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மாணவர்களது வாகனங்களையும், மாணவர்களையும் உள்நுழைவதற்கு அனுமதிக்கவில்லை.

'இலங்கையின் சுதந்திர நாளில் கொடியேற்றுகின்றீர்கள். நாங்கள் பல்கலைக்கழகத்தினுள் வழிபாட்டுக்கும் செல்ல முடியாதா?' என்று மாணவர்கள் கேள்வி எழுப்பினர். பல்கலைக் கழகத்தினுள் பணியாற்றுபவர்களையே உள்ளே அனுமதிக்கவில்லை என்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பதிலளித்ததாக மாணவர்கள் கூறினர்.

இதன் பின்னரே பல்கலைக்கழக பிரதான வாயிலில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது. (ஒ-20)

## இலங்கையின் சுதந்திர நாளில் ஏ-9 வீதி 4 மணிநேரம் பூட்டு

வவுனியா, பெப். 5

இலங்கையின் சுதந்திர நாளை முன்னிட்டு, வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்காக ஏ-9 வீதி உட்பட மூன்று வீதிகள் 4மணி நேரம் நேற்று மூடப்பட்டுள்ளன.

சுதந்திரதின நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் கலந்துகொண்டிருந்தார்.

ஏ-9 வீதியின் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியிலிருந்து மருத்துவமனைச் சுற்றுவட்டம் வரையிலான பாதையும், நகரசபைவீதி, நூலக வீதி ஆகியனவும் காலை 6.30 மணி தொடக்கம் காலை 10.30 மணி வரை மூடப்பட்டதுடன் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

சுதந்திரதின நிகழ்வுகளுக்கு செல்பவர்கள் சோதனைக்குட்படுத்தப் பட்டதுடன் நிகழ்வுகளை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதிமறுக்கப் பட்டிருந்தது. (ஒ-18)

# இலங்கையின் சுதந்திர நாள் தமிழ் மக்களுக்கு கரிநாளே

### யாழில் போராட்டம்




யாழ்ப்பாணம்.பெப்.5

இலங்கையின் சுதந்திரதினம், தமிழ் மக்களுக்கு எப்போதும் கரிநாளே என்று பிரகனப்படுத்தி, யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

தமிழ் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணையை நடத்து, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல் கைதிகளை நிபந்தனை இல்லாமல் விடுதலை செய், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியவாறு, யாழ்ப்பாணம் முனீஸ்வரன் கோவில் பகுதி வரை ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலத்தில் "வடக்கு கிழக்கு தமிழரின் பூர்வீக தேசம், இலங்கையின் சுதந்திரநாள் தமிழரின் கரிநாள், முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை மறக்க மாட்டோம், காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு" போன்ற கோஷங்களை எழுப்பினர். (ஒ-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கைதான மீனவர்களை விடுவியுங்கள்

## சீமான் கோரிக்கை

**கொழும்பு, பெப்.5**

**எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, சுமார் இரண்டு மாதங்களுக்கும் மேலாக சென்னை புழல் சிறையிலுள்ள, 4 இலங்கை மீனவர்களை விடுவிக்குமாறு, நாம் தமிழர் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.**

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் நால்வரும், படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே, தமிழ்நாட்டின் கடல் எல்லைக்குள் கரை ஒதுங்க நேரிட்டது. எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், அவர்களைக் கைது செய்தமை சட்டத்துக்குப் புறம்பானதாகும். எனவே, சென்னை புழல் சிறையிலுள்ள இலங்கை மீனவர்கள் நால்வரையும் விடுவித்து, இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-4-இ)

# இலங்கையின் சுதந்திரதினம் வடக்கிலும் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், பெப்.5

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் வடக்கு மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களில் நேற்று இடம்பெற்றன.



### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசனால் இலங்கையின் தேசிய கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

"சவால்களை முறியடிக்கும் நாளை" எனும் தொனிப்பொருளில் சுதந்திர தின உரை இடம்பெற்றது.

உத்தியோகத்தர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாவட்டச் செயலக வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.



### மன்னார்

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், மாவட்டச் செயலர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் பிரதான சுற்றுவட்டத்தில் பல இனங்களை பிரதிபலிக்கும் சிறுவர்களுடன் பவனி ஆரம்பிக்கப்பட்டு, மாவட்டச் செயலத்தின் முன் அமைக்கப்பட்ட விழா மேடையில், தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

தொடர்ந்து சமாதானப் புறா மற்றும் சமாதான பலூன்கள் பறக்க விடப்பட்டன.

மாவட்டச் செயலரின் சிறப்புரையை தொடர்ந்து, மரக்கன்றுகள் நடப்பட்டன.



### வவுனியா

வ்வுனியா மாவட்டத்தின் பிரதான நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில், மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்றது. நகரசபை மைதானத்தில் இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் வரவேற்கப்பட்டனர். தமிழ், சிங்கள மொழிகளில் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. மைதானத்தில் அதிதிகளால் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

### முல்லைத்தீவு



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி நிலையத்தில், மாவட்டச் செயலர் க. விமலநாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

(ஒ-4-20,213,18)

## பொது மன்னிப்பின் கீழ் 197 கைதிகள் விடுதலை

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலிருந்தும் 197 கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர். (வ-இ)

## வவுனியா சிறைச்சாலையில் ஒருவருக்கு பொதுமன்னிப்பு

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரும் நேற்று விடுவிக்கப்பட்டார். (வ-18)




தமிழ்மக்களுக்கு ஒண்டெண்டால் உடன துணிஞ்சு குரல் குடுக்கிறது எங்கட யாழ்ப்பாணக் கம்பஸ் பெடியள்தான். ஆனால் அந்தக் கம்பஸ் பெடியளுக்கே பிரச்சினை எண்டால் ஆர் குரல் குடுப்பினம்? மாணவர் ஒன்றியம் தானே. ஆனால், இப்ப அந்த மாணவர் ஒன்றியம் தான் கம்பஸ் பெடியளுக்கே பிரச்சினையா மாறி யிருக்கு. கிட்டத்தட்ட மூண்டு வருசமா ஒரே நிர்வாகம் தான் மாணவர் ஒன்றியத்தில இருக்கு. 2019 ஆம் ஆண்டு கடைசியா ஒன்றியத்தின்ர எலக்சன் நடந்தது. அப்ப நிர்வாகத்தைப் பொறுப்பேற்றவை இப்ப படிச்சு முடிஞ்சு, பட்டமும் வாங்கி, பழைய மாணவர் எண்ட நிலைக்கும் வந்திட்டினம். ஆனால் இன்னமும் நிர்வாகத்தை அவை அடுத்தடுத்த பிரிவுகளிட்ட கையளிக்கிற நோக்கம் இல்லாமல் இருக்கினம். இப்பிடி 'பாஸ் அவுட்' செய்தவையின்ர கையில மாணவர் ஒன்றிய நிர்வாகம் இருக்கிறதால, கம்பஸ் மாணவர்களுக்கு இருக்கிற பிரச்சினையள் அவைக்கு தெரியுதுதில்லை. அதால கன பிரச்சினைகளை மாணவர்கள் தாங்களே நேரடியா பல்கலைக்கழக நிர்வாகத்திட்ட முறையிட்டு, அதுக்கு தீர்வு கேட்டு வருகினம். கிட்டடியில கூட எக்ஸாம் ஒண்டு நடந்தது. அதில பரீட்சை நேர அட்டவணையில சில குழப்பங்கள். ஆரிட்ட அதை முறையிடுறதெண்டு மாணவர்களுக்கு தெரியேலை. பிறகு ஏதோ ஒரு வழிப்பட்டு அதை மேலிடத்துக்கு தெரியப்படுத்தி, கஷ்டப்பட்டு தீர்வு கண்டவை. ஒரு தனி மாணவரா தங்கட பிரச்சினையை மேலிடத்துக்கு தெரியப்படுத்துறதை விட மாணவர் ஒன்றியம் எண்ட ரீதியில தெரியப்படுத்தினால் அதுக்கு 'பவரும்'கூட தீர்வும் உடன கிடைக்கும். அதுக்குத் தானே மாணவர் ஒன்றியங்கள் இருக்கு. ஆனால் மாணவர்களின்ர பிரச்சினை பற்றி அலட்டிக் கொள்ளாத இந்த மாணவர் ஒன்றிய நிர்வாகத்தை அடுத்த பிரிவுகளிட்ட குடுத்தால் அவையாவது ஆக்கபூர்வமா ஏதாவது செய்வினமே?

''இந்த முறை கலைப்பீடத்தில அஞ்சுபேர் எலக்ச னில நிக்கினம். அதால எலக்சனை இப்ப வைக்க ஏலாது'' எண்ட மாதிரி நொண்டிச் சாட்டுகளைச் சொல்லிக் கொண்டு, இந்தப் பழைய மாணவர்கள், காலம் முழுக்க தங்கட கையில மாணவர் ஒன்றிய நிர்வாகத்தை வைச்சிருக்கப்போகினமோ? எண்ட 'டவுட்' கம்பஸில இப்ப படிச்சுக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கு வந்திருக்கு.

மேலிடத்துக்கும் இதைப் பற்றி கனதரம் கம்பஸ் மாணவர்கள் முறையிட்டும் ஒரு பிரயோசனமுமில்லையாம். அவையும் பழைய ஆக் கள் இருந்தால் தங்களுக்கு தலையாட்டிக் கொண்டு இருப்பினம் எண்டதால, இதைப் பற்றி கண்டும் காணாமல் நடக்கினம்.

ஊருக்கெல்லாம் நியாயம் சொல்லுற ஒன்றியக்காரர், முதலில தாங்கள் நியாயமா நடக்க வேணுமெல்லோ? ஜனநாயகத்தை பற்றி அறிக்கை விட்டுக் கொண்டு, சர்வாதிகாரமா நிர்வாகத்தை தங்கட கமக்கட்டுக்கை வைச்சி ருக்கிறது தான் நியாயமோ...?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணைய வழி நிகழ்ச்சித் தொடர் வரிசையின் 28 ஆவது நிகழ்வாக "இலத்திரனியல் மற்றும் எண்ணிமக் கல்விச் சவால்களும் வாய்ப்புகளும்" என்ற தலைப்பிலான கலந்துரையாடல், இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வளவாளராக பேராதனைப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.கே. நவரட்ணராஜா கலந்து கொள்வார். சூம் இலக்கம்:81415584070, https://us02web.zoom.us/j/81415584070 என்ற இணையத்தளம் என்பவற்றினூடாகக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (ஒ-ரீ1)

# விற்பனைக்கு தயாரான 20 நெல்மூடைகள் நாசம்

## வயலுக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்

முல்லைத்தீவு,பெப்.5

**அறுவடை செய்யப்பட்டு, விற்பனைக்காக எடுத்துச் செல்லத் தயாரான 20 நெல் மூடைகளை யானைகள் துவம்சம் செய்துள்ளன.**



இந்தச் சம்பவம் புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டுக் குளத்தின் கீழ் உள்ள வயலில் நடந்துள்ளது. காலபோக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயி ஒருவர், தனது வயலில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை மூடையாக்கி, உழவு இயந்திரத்திரத்தில் ஏற்றிச் செல்வதற்காகக் காத்திருந்தார். இந்தநிலையில் அங்கு புகுந்த காட்டுயானைகள் விவசாயியைத் துரத்தி, நெல் மூடைகளை நாசம் செய்துள்ளன.

சுமார் இரண்டு ஏக்கரில், அதிக விலைக்கு உரம் மற்றும் களைநாசினியைப் பயன்படுத்தி நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிக்கு, எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காத போதும், அறுவடையை மேற்கொண்டார். அவற்றையும் யானைகள் நாசப்படுத்தியுள்ளன. (ஒ-4-19)

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி மீள வெளியீடு

கொழும்பு, பெப்.5

2020 உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு மீண்டும் வெளியிடப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் https://admission.ugc.ac.lk/selection/ எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக இதனைப் பார்வையிடலாம். 40ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து பல்கலைக்கழகத்துக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (வ-இ)

## உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க கோரிய ரிட் மனு தள்ளுபடி

கொழும்பு, பெப்.5

2021 க.பொ.த உயர்தரப் பரீட்சை கால அட்டவணையை இடைநிறுத்துமாறு கோரி சிவில் செயற்பாட்டாளர் நாகானந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மனுவில் கோரப்பட்டுள்ள நிவாரணத்தை வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை எனத் தெரிவித்து நீதியரசர் சோபித ராஜகருணா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை 20 வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. (வ-இ)

## மஹோற்சவம்

வட்டுக்கோட்டை ஏகபாத ருத்ரர் கோயிலின் கும்பாபிஷேகம், நாளை காலை 9.35 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

* * *

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாளின் மஹோற்சவம் நாளை மு.பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மஹோற்சவத்தின் 10 ஆவது நாளான எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத்திருவிழாவும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 17 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் 18 ஆம் திகதி பூங்காவனமும் 19 ஆம் திகதி கப்பல் திருவிழாவும் 20 ஆம் திகதி வைரவர் மடையும் இடம்பெறும்.

* * *

நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 15 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (ஒ-ரீ1)

வாக்காளர்தின:-

# போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, பெப். 5

2022 ஆம் ஆண்டு தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப்போட்டியின் கோட்டமட்ட முடிவுகள் வெளியாகியுள்ளன.

**கரைச்சிக் கோட்டம்**

1 ஆம் இடம்- முஹம்மது சஹ்றூப் ஹம்னா இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை,

2ஆம் இடம்- சசிக்குமார் தேனிசை வெல்வாநகர் அ.த.க. பாடசாலை,

3 ஆம் இடம்- சங்கரலிங்கம் ரணஜன் திருவையாறு மகா வித்தியாலயம்

**பூநகரிக் கோட்டம்**

1 ஆம் இடம்- ஸ்ரீ.கனிநிலவன் கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம்,

2ஆம் இடம்- கமலேஸ்வரன் அகலியா கிராஞ்சி அ.த.க.பாடசாலை,

3 ஆம்இடம்-சௌந்தரராசன் தமிழ்மகன் செல்லியாதீவு அ.த.க.பாடசாலை

**பளைக் கோட்டம்**

1 ஆம் இடம்- தங்கவேலு ஜெசிந்தன் வேம்பொடுகேணி சி.சி.த.க,

2ஆம் இடம்- ராஜமனோகரன் எழில்பிரியன்பளை மத்திய கல்லூரி,

3ஆம் இடம் ஸ்ரீகுகன் ஸ்ரீடிஷோபன் பளை மத்திய கல்லூரி

**கண்டாவளைக் கோட்டம்**

1 ஆம் இடம்- டிசானரெத்தினம் சயந்தன் முருகானந்தா கல்லூரி (ஒ-ரீ1)

# கருத்தமர்வு

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில், வாரந்தம் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெற்று வரும் மருத்துவக் கருத்தமர்வுகள், "யாவர்க்கும் நலம்" என்ற நிகழ்ச்சித் தொடரின் இந்த வாரக் கருத்தமர்வு இன்று "சருமம் மற்றும் கேசப்பராமரிப்பு" என்ற தலைப்பில் பிரபல மருத்துவ நிபுணர்களால் கலந்துரையாடப்படவுள்ளது. கருத்தமர்வில் சூம் செயலி இலக்கம் 899 8528 2023, கடவுச்சொல் 354485 என்பவற்றினூடாகக் கலந்து கொள்ளுமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-ரீ1)

# பழக்கடை திடீரென தீப்பற்றி எரிந்து நாசம்

வவுனியா, பெப்.5

வவுனியா, குருமன்காடு பகுதியிலுள்ள பழக்கடை ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

உரிமையாளர் வியாபாரத்தை முடித்துக் கொண்டு கடையைப் பூட்டிவிட்டுச் சென்ற நிலையிலேயே குறித்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுக்குள் கொண்டுவந்த போதும் பழவியாபார நிலையம் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-110)

# ஜனவரியில் பணவீக்கம் 14.2வீதமாக அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைவாக, 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பணவீக்கம் 14.2 வீதமாக அதிகரித்துள்ளது.

உணவு மற்றும் உணவு அல்லாத வகைகளின் மாதாந்த விலை உயர்வால் பணவீக்கம் அதிகரித்துள்ளது. உணவுப் பணவீக்கமானது 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22.1 வீதமாக இருந்த நிலையில், 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 வீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8.3 வீதமாக இருந்த உணவு அல்லாத பணவீக்கம் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9.2 வீதமாக அதிகரித்துள்ளது. (ம-4-இ)

நுவரெலியாவில்

# பிரதேச செயலக அதிகரிப்பு; கையெழுத்து வேட்டை ஆரம்பம்!

கிளிநொச்சி,பெப்.5

நுவரெலியா மாவட்டத்தில் அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாக, பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று வடக்கிலிருந்து தெற்கு வரை கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மலையக அரசியல் அரங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் கையெழுத்துச் சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்பில் அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ம. திலகராஜ் தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் 5 ஆக உள்ள பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையை 10 ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் 2018 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டது. அமைச்சரவை அனுமதியின் பின்னர் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் நுவரெலியா மாவட்டத்துக்கான பிரதேச செயலகங்கள் அமைக்கப்படவில்லை. இதற்கு எதிராக கையெழுத்துப் போராட்டம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. -என்றார். (ஒ-4-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 5

டவர் நாடகப் பாடசாலையின் ஏற்பாட்டில், 2022 - 2023 கல்வியாண்டுக்கு தமிழ்மொழி மூலமான உயர் நாடகமும் அரங்கியலும் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 2 தடவைகளுக்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆங்கிலம், அழகியல் ஆகிய பாடங்கள் அடங்கலாக 6 பாடங்களில் கட்டாய சித்தியுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரேதடவையில் 3 பாடங்களில் ஏதாவது ஒரு அமர்விலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன், கற்கைநெறிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது க.பொ.த. உயர்தரப் பிரிவில் நாடகமும், அரங்கியலும் பாடத்தைக் கற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு 70 மாணவர்களே உள்வாங்கப்படவுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாணம், சுண்டுக்குளி கலாசார மத்திய நிலையத்தில் இந்த கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் கற்கைநெறியில் தேர்ச்சி பெறுகின்ற மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்தியக் கிளையான யாழ்ப்பாணத்தில் தமது கல்விமாணிப் பட்டத்தை தொடருவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையும் மேற்கொண்டு வருவதாக தமிழ் நாடக அபிவிருத்திப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை www.towerhall.lk, www.northernprovince.lk, www.np.gov.lk, edumin.np.gov.lk ஆகிய இணையத்தளங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி1)

# யாழ்.போதனா மருத்துவமனையில் சிறுநீரக மாற்று சிகிச்சை மையம்!




யாழ்ப்பாணம், பெப். 5

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை நிலையம் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிறுநீரக அறுவைச் சிகிச்சை நிலையம் இதுவரை இல்லாமல் இருந்தது. சிறுநீரக சிகிச்சை நிபுணர்கள் மற்றும் குருதிக் கலன் சிகிச்சை நிபுணர்களின் முயற்சியால் தற்போது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை நிலையமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. சிறுநீரகம் சார்ந்த சிகிச்சைகளுக்காக நோயாளர்கள் கண்டி மற்றும் கொழும்பு மருத்துவமனைகளுக்குச் சென்று வந்த நிலையில் இனி வரும் காலங்களில் மேற்படி சிகிச்சையை யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## கசிப்பு நிலையம் சுற்றிவளைப்பு

### இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 5

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சம் இடமொன்று கடந்த திங்கட்கிழமை சுற்றிவளைக்கப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கசிப்புக் காய்ச்சி விற்பனை இடம்பெறுகிறது எனத் தெல்லிப்பழை பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது கசிப்புக் காய்ச்சம் இடமாக பயன்படுத்தப்பட்ட பாழடைந்த வீடொன்றிலிருந்து 80லீற்றர் கசிப்பும் 17 பீப்பாய் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதையடுத்து குறித்த வீட்டுக்கு அண்மையிலிருந்த பற்றைக் காட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், மறைத்து வைக்கப்பட்டிருந்த 21 லட்சம் ரூபா பணத்தொகையும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (வ-26,125)

## மூவருக்கு தண்டம்

சாவகச்சேரி, பெப். 5

கசிப்பு வைத்திருந்த இருவருக்கு 30 ஆயிரம் ரூபாவும், தீர்வையற்ற சிகரெட் விற்பனை செய்த வியாபாரிக்கு 5 ஆயிரம் ரூபாவும் தண்டம் சாவகச்சேரி நீதிமன்றால் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் நடத்திய திடீர் பரிசோதனையில், மட்டுவில்பகுதியில் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும், மீசாலை மேற்குப்பகுதியில் 180 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் தீர்வையற்ற சிகரெட் விற்பனை செய்த வர்த்தகரும் கைது செய்யப்பட்டார். இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த புதன்கிழமை வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இதன் போதே தண்டம் விதிக்கப்பட்டது. (ம-4-9)



## சான்றிதழ் வழங்கலும் கண்காட்சியும்

மன்னார், பெப்5

ஒருவருட மனைப்பொருளியல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கண்காட்சியும் அடம்பனில் உள்ள பயிற்சி நிலையத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

மன்னார், மாந்தைமேற்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் கடந்த ஆண்டு பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாந்தைமேற்கு பிரதேச செயலர் டி.சி. அரவிந்தராஜ் சான்றிதழ்களை வழங்கிவைத்தார். (வ-213)

## பண்ணையாளர்களுக்கு பயிற்சிப்பட்டறை

முல்லைத்தீவு, பெப். 5

முல்லைத்தீவு, அலம்பில் கிராம அலுவலர் பிரிவில் கால்நடைகள் வளர்ப்போருக்கான பயிற்சிப்பட்டறை கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது.

பயிற்சிப்பட்டறையில், அசோலா வளர்ப்பதற்கான தொட்டி அமைத்துக் காண்பிக்கப்பட்டதுடன், 'சீஓ5' வகை புல்லினமும் அசோலா தொட்டி அமைப்பதற்கான பொலித்தீன் மற்றும் அசோலா என்பனவற்றுடன் கோழி வளர்ப்புக்கான அடிப்படை பராமரிப்பு கையேடு ஆகியனவும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

தேடல் அமைப்பினர், இளவேனில் ஒருங்கிணைந்த பண்ணையினர் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் த.அமலனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டோருக்கான, பயிற்சியை விவசாயப் போதனாசிரியர் வழங்கினார். (ம-ரி1-13)

## தேடப்பட்ட மாணவன் வவுனியாவில் மீட்பு

கொழும்பு, பெப். 5

காணாமற்போனார் என்று தேடப்பட்டு வந்த, வாழைச்சேனை ஓட்டமாவடியைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவன், வவுனியாவில் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 28ஆம் திகதி வீட்டை விட்டுச் சென்றிருந்த மாணவன், வீடு திரும்பவில்லை. இதனால், வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தனர். பொலிஸாரின் விசாரணைகளில் 5 நாள்களின் பின்னர் வவுனியாவில் மாணவன் மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே தான் வீட்டை விட்டு வெளியேறினேன் என்று மாணவன் வாக்குமூலம் அளித்துள்ளார். மாணவன் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-4-இ)

## கிராமங்கள் முன்னேற்றமடைய இளைஞர் பங்களிப்பு அவசியம்

### பிரதேச செயலர் சிவஸ்ரீ வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 5

கிராமங்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால், இளைஞர்களின் பங்களிப்பு மிக அவசியம் என்று வலி. வடக்குப் பிரதேச செயலர் க.சிவஸ்ரீ தெரிவித்தார்.

அளவெட்டி தெற்கு கல்வாணி சனசமூக நிலையத்தின் மணிமண்டபத் திறப்பு விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஒரு கிராமத்தின் எடுத்துக்காட்டாக சன சமூக நிலையங்கள் உள்ளன. இவற்றின் ஊடாக கிராம இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்கினால், அந்தக் கிராமத்தின் வளர்ச்சிப் பாதை என்றும் வலுவாக இருக்கும். பின்தங்கிய கற்றல் செயற்பாடுகளை இந்த சனசமூக நிலையங்கள் ஊடாக முன்னேற்ற முடியும் - என்றார். (ம-4-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு லட்சம் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், பெப். 5**

**வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக, ஒரு லட்சம் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளும் பணிகள் நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.**

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், 435 கிராமங்களுக்கான பணிகள் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன. ஆரம்ப நிகழ்வு, யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் திட்டத்தை ஆரம்பித்தார். நிகழ்வில், மாவட்டச் செயலர் க. மகேசன், மாவட்ட மேலதிக செயலர் ம. பிரதீபன், பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். இதே தருணத்தில் ஒவ்வொரு கிராமங்களிலும் கிராம மட்ட உத்தியோதர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அதிகாரிகள் முன்னிலையில் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில், ஆரம்பத் திட்டமாக, மாந்தை மேற்கு வேட்டையார் முறிப்பு கிராமத்தில், மாதர் சங்கத்துக்கு அரைக்கும் ஆலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் திட்டத்தை ஆரம்பித்தார். நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர், சமுர்த்திப் பணிப்பாளர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.










**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாரதிபுரத்தில் நேற்று இடம்பெற்றது.

ஆரம்ப சுகாதார நிலையத்தை விஸ்தரிப்பு செய்வதற்கான அடிக்கல் நடப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கல்லை நட்டார். நிகழ்வில் மாவட்டச் செயலர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி, கிராம சேவையாளர் மற்றும் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர்.

**வவுனியா**

வவுனியாவில் அனைத்து பிரதேச செயலக பிரிவிலும் சம நேரத்தில் மத குருமாரின் ஆசீர்வாதத்துடன் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலர் ராகுல் தலைமையில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சிறுகைத்தொழில், வியாபாரம், உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு தொழில் அபிவிருத்திக்கான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன. கிராமிய அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டன. அத்துடன், மரக்கன்றுகளும் நடப்பட்டன.

நிகழ்வில் வவுனியா பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவதர்சன் சுபாசினி, சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் த.கோகிலரமணி, மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பவானி, பண்டாரிக்குளம் அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கீதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

(ம-4,27,9,56,113.6.18)

## பதுங்கு குழியில் போதைப்பொருள்

கொழும்பு, பெப். 5

வீட்டுக்குள் இரகசிய பதுங்கு குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹசீஸ் போதைப்பொருள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கிராண்ட்பாஸ், மஹவத்த வீதியிலுள்ள வீடொன்றில் இருந்தே, 3 கிலோ 926 கிராம் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த போதைப் பொருளின் பெறுமதி 4 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)

## கிழக்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் மாற்றம்

திருமலை, பெப். 5

கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர். அதற்கான இடமாற்றக்கடிதங்கள் கிழக்கு மாகாண ஆளுநரால் வழங்கப்பட்டன.

அதற்கமைவாக கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக திருமதி கலாமதி பத்மராஜா, மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கலாநிதி எம்.கோபாலரத்னம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக திருமதி ஜே.ஜே.முரளிதரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்கா, கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக ஐ.கே.ஜீ.முத்துபண்டா, கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராக எம்.வை.சலீம், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக ஏ.எச்.எம்.அன்ஸார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-4-இ)

## வழக்கிலிருந்து பஸில் விடுவிப்பு

கொழும்பு, பெப். 5

அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் 'வாழ்வெழுச்சி' திட்டத்தின் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்ஸ்ரீரணவக்க ஆகியோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது 200 மில்லியன் ரூபாவுக்கும் அதிக அரச நிதியைச் செலவிட்டு, 5 மில்லியன் நாள்காட்டிகளை அச்சிட்ட சம்பவம் தொடர்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கிலிருந்து இருவரையும் விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்த உத்தரவிட்டார். (ம-4-இ)

## ஆசிரியை வேண்டாம் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

திருமலை, பெப். 5

திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியின் முஸ்லிம் ஆசிரியையை இடமாற்றக்கோரி, குறித்த பாடசாலையின் பெற்றோர் நேற்றுமுன்தினம் வலயக் கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் குறித்த பாடசாலையில் ஹபாயா அணிந்து கடமையேற்கச் சென்ற ஆசிரியைக்கும், பாடசாலை நிர்வாகத்தினரிடையேயும் கடந்த புதன்கிழமை முரண்பாடு ஏற்பட்டது.

இந்த நிலையில் பாடசாலைக்கு முன்னால் ஒன்றுகூடிய பெற்றோர் சிலர், ஆர்ப்பாட்டமாகச் சென்று திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் முன்னால் ஒன்றுகூடி பதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த ஆசிரியையை இடமாற்றவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். (ம-4-இ)

## அரசு மீது சேறுபூச கட்சிகள் முனைப்பு

கொழும்பு, பெப். 5

தற்போதைய அரசு, ஜனநாயக நடைமுறையை தெளிவாக நம்பி நாட்டைப் பாதுகாக்கின்றது. எனவே அரசியல் சக்திகள் இணைந்து செயற்பட வேண்டும். மாறாக அரசு மீது சேறுபூச கட்சிகள் முனைகின்றன என்று இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்; மக்கள் விடுதலை முன்னணியானது, வீடுகளையும், மக்களையும் எரித்த வரலாற்றைக் கொண்ட கட்சி. தற்போது அந்தக் கட்சியினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல், ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட சண்டையாக அல்லது அவர்களுக்கு இடையேயான சண்டையாகக்கூட இருக்கலாம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

எனவே இதை யார் செய்தார்கள் என்பது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் -என்றார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நீங்கள் வேற நாடய்யா...!

இலங்கையின் 74ஆவது சுதந்திரநாள் தெற்கில் நேற்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை கிடைத்தமையை சிங்கள தேசம் கொண்டாடிய அதேநாளில் தமிழர் தேசம் கரிநாளாக அறிவித்து போராட்டங்களில் குதித்தது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது சுதந்திர நாள் உரையில், கௌரவம் மிக்க பிரஜைகளாக வாழ்வதற்குள்ள உரிமையை நிலைநாட்டுவதற்காக மக்கள் வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் கலகங்கள், போராட்டங்கள், போர்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். அதைப்போல தாயகத்தில் தனித்துவமான உரிமையுடன் கௌரவமான பிரஜைகளாக வாழ்வதற்கு தமிழர் தேசம் நேற்று கரிநாள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

ஜனாதிபதி தனது உரையில், குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இலங்கைமீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்கு ஏதேனுமொரு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டபோதும், எந்தவிதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு உடந்தையாக இருக்கவில்லை என்பதுடன், எதிர்காலத்திலும் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படவும் மாட்டாது என்று தெரிவித்திருந்தார்.

இலங்கையின் இப்போதைய ஜனாதிபதியாக இருக்கின்ற கோத்தாபய, பாதுகாப்புச் செயலராக இருந்தபோதுதான், இந்தநாட்டின் வரலாற்றிலேயே மிக மோசமான மனித உரிமை மீறல்களும், மனிதப் பண்புகளுக்கு ஒவ்வாத செயல்களும், இனப்படுகொலையும் அரங்கேறியிருந்தன.

2009 ஆம் ஆண்டு போரை முடித்துக்கொள்வதற்காக சர்வதேசச் சட்டங்களையும், மனிதாபிமானச் சட்டங்களையும் குப்பைத்தொட்டிக்குள் தூக்கி எறிந்துவிட்டு, போரை முடித்தவர் இதே கோத்தாபயதான். மனிதாபிமானப் போர் என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்த இனப்படுகொலையின் வலிகளை தமிழர் தேசம் இன்றும் சுமந்து கொண்டிருக்கின்றது.

சிங்கள தேசத்தால் தமிழர் தேசம் சமாதியாக்கப்பட்டதன் அடையாளக் குறியீடான, முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழர் தேசம் ஓரணியாகத் திரண்டு கரிநாளைக் கடைப்பிடித்திருக்கின்றது. சிங்கள தேசத்துக்கு தெளிவான செய்தியை நேற்றைய கரிநாள் போராட்டம் முரசறைந்திருக்கின்றது.

'நாங்களும், நீங்களும் ஒன்றல்ல. எங்கள் உணர்வுகளும், உங்கள் உணர்வுகளும் வேறுவேறு. எங்களின் வலி உங்களுக்கு கொண்டாட்டம் என்றால், நாம் எப்போதுமே ஒன்றுசேரவே முடியாது. விடுதலைக்கான தீ எப்போதும் எரிந்து கொண்டேயிருக்கின்றது. நாங்கள் இப்போதும் வலிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் – துடித்துக் கொண்டிருக்கின்றோம். நீங்கள் வேறு நாடய்யா, நாங்கள் வேறு நாடு' என்பதே அந்தச் செய்தி.

யார் மனிதப்படுகொலைகளை நிகழ்த்தினார்களோ, அவர்களே நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு, 'இந்த நாட்டில் மனித உரிமை மீறல்கள் நடைபெறவேயில்லை' என்று வாய்கூசாமல் சொல்ல முடிகின்றது என்றால், சிங்கள – பௌத்தத்தின் பேரினவாதத் திமிரில் ஊறி ஊறித் திளைத்திருக்கும் இந்த அரசிடமிருந்து– ஆட்சியாளரிடமிருந்து தமிழர்கள் எப்படி நீதியையும், நியாயத்தையும், தீர்வையும் எதிர்பார்க்க முடியும்?

நாளொரு நல்வார்த்தை

"எதிரிகளுக்கு எம்மைப்பார்த்து எரிச்சல் வருகின்றதென்றால், நமது இலட்சியத்தை நோக்கி சரியாகப் பயணிக்கிறோம் என்பதே அர்த்தம்" –ஜென்னி மார்க்ஸ்



# சேதனப்பசளையை பயன்படுத்தி வெற்றிகரமான அறுவடையாம்

**கொழும்பு, பெப். 5**

**கடந்த பெரும்போகத்தின்போது தமது நிறுவனங்கள் தயாரித்த சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி வெற்றிகரமான அறுவடைகளை விவசாயிகள் பெற்றுக்கொண்டனர் என்று பசளை உற்பத்தியாளர்கள் புள்ளிவிவரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

தேசிய பசளை உற்பத்தியாளர்களுக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்க அரசு அவதானம் செலுத்தியுள்ளது. இரசாயனப் பசளை இறக்குமதிக்காக வெளிநாட்டவர்களுக்கு பல வருடங்களாகச் செலவளிக்கப்பட்ட பில்லியன் கணக்கான நிதி, தற்போது இந்தத் தொழிற்றுறையினருக்குக் கிடைக்கப் பெறுவதால், புதிய தேசிய தொழிற்றுறையொன்று கட்டியெழுப்பப்படுகிறது. இதன் மூலம், தேசிய தொழில் முயற்சியாளர்கள் மேலும் பலமடைவர்.

தவறான பரப்புரைகளுக்கு விவசாயிகள் உள்ளானதால், உயர்தரத்திலான பசளைகளை அவர்கள் பயன்படுத்தாத சந்தர்ப்பங்கள் பலவும் பதிவாகியுள்ளன. கடந்த பெரும்போகத்தின்போது தமது நிறுவனங்கள் உற்பத்தி செய்த சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி வெற்றிகரமான அறுவடைகளைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் தொடர்பான விவரங்களை, பசளை உற்பத்தியாளர்கள் புள்ளிவிவரங்களுடன் முன்வைத்தனர்.

வெற்றியீட்டிய பல உதாரணங்கள் காணப்படுகின்றபோதிலும், தோல்வியடைந்த சில சம்பவங்கள் மாத்திரமே ஊடகங்கள் வாயிலாகப் பரப்புரைப்படுத்தப்படுகின்றன என்று, இந்தக் கூட்டத்தின்போது அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

குழுக்கள் உருவாக்கப்பட்டு, பசளை உற்பத்தி மற்றும் விநியோக வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்று, இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச தெரிவித்தார் - என்றுள்ளது. (ஒ-இ)

*வடக்கு உட்பட*

# 6 மாகாணங்களுக்கு விவசாய இயந்திரங்கள்

கொழும்பு, பெப். 5

6 மாகாணங்களைச் சேர்ந்த 47 கமநல சேவை நிலையங்களுக்கான விவசாய இயந்திரங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதற்காகச் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை 250 மில்லியன் ரூபா.

அறுவடை செய்யும் இயந்திரங்கள், களை பறிக்கும் இயந்திரங்கள், நாற்று நடும் இயந்திரங்கள், 45 குதிரை வலுவுடைய உழவியந்திரங்கள் உள்ளிட்ட 7 வகையான இயந்திரங்களே இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டன. வடக்கு, வடமத்தி, கிழக்கு, வடமேல், ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கு உரித்தான 11 மாவட்டங்களில் அமைந்துள்ள 47 கமநலச் சேவை நிலையங்களுக்கே இந்த இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (ஒ-இ)

நாளை 06.02.2022 ஞாயிற்றுக்கிழமை தை 24

சுபநேரம் : 09.35 - 11.05

ராகுகாலம் : 05.05 - 06:35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1947



மறைவு 01 . 02 . 2022

## திருமதி சோதிலிங்கம் இராஜேஸ்வரி

செட்டிச்சோலை அளவெட்டி வடக்கினை பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதிலிங்கம் இராஜேஸ்வரி அவர்கள் கடந்த (01.02.2022) இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தங்கம்மா தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற தம்பிமுத்து நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சோதிலிங்கம் (நீர்வேலி கந்தசாமி தேவஸ்தானம், பரிபாலனசபைத் தலைவர்) அவர்களின் அன்பு மனைவியும். சாதனா, கல்பனா ஆகியோரின் அன்புத் தாயாரும், பாஸ்கரன், ஜதீஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம், இரத்தினம், பரராசசிங்கம் மற்றும் சுப்பிரமணியம், தவமலர் பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மக்மில்லன், மதுமில்லன், மீரா, பிரவீன், நயனிக்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு, இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தன் கருணை,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.


தகவல்:
குடும்பத்தினர்
021 321 3443, 076 367 4470
077 348 4932

(cs. 60926) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1941



மறைவு 04 . 02 . 2022

## திரு. தில்லையம்பலம் தேவதாசன்

(ஓய்வுபெற்ற வங்கி ஊழியர் - HNB)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும். சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. தில்லையம்பலம் தேவதாசன் நேற்று (04.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற குணவதி அவர்களின் அன்புக் கணவரும், கோணேஸ்வரன் (HNB - Metro - ஊழியர்), நிரஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலதி, ஜெயராஜா (ஆசிரியர்-யா/ கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தனுசன், ஆர்த்திகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலங்கை வங்கி அருகாமை
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
கோணேஸ்வரன்-மகன்
0777 592656

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 . 01 . 1964



இறப்பு 17 . 01 . 2021

## அமரர் பெரியதம்பி ஜெயந்தன்

திதி - பஞ்சமி (05.02.2022)

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கின்றதே ஐயா!
நீங்கள் இல்லாத எங்கள் இல்லங்கள்
வெறிச்சோடிக் கிடக்கின்றது எங்கள்
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்றுவிட்டது ஐயா!
சொந்த பந்தங்களின் உணர்வுகள் உறைந்து விட்டது
உற்றார், உறவினர், நண்பர்கள் உங்களைத் தேடுகிறார்கள்
எமது இதயங்கள் இயங்கவில்லை ஐயா!
உங்களது நெறிமுறை தவறாத வாழ்வின் பயனாக
நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனிடம் சங்கமிக்கும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வரியப்புலம்,
சுன்னாகம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 630 9925

(CS 18378) 1-6

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வெளியிடங்களில் மற்றவர்களின் பாராட்டை பெறுவீர்கள். உறவினர்கள் மூலம் அரசாங்கத்தின் உதவிகள் தேடிவரும். நீண்ட நாள் பிரச்சினை ஒன்று இன்று முடிவுக்கு வரும்.

**இடபம்:** குழந்தைகளால் பெருமிதம் உண்டாகும். மகிழ்ச்சி கூடும். மற்றவர்களுக்கு தீங்கு செய்யாமல் இருப்பது நல்லது. இன்று மன உளைச்சல் நீங்கி நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம்:** நீண்ட நாளாக எதிர்பார்த்த உதவிக்கான வாய்ப்பு இன்று வரும். வேலை தேடுபவர்களுக்கு வெளியூரில் இருந்து வாய்ப்பு வரும். வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்:** செலவுகளை சமாளிக்க கடன் வாங்க வேண்டாம். குடும்பத்தினரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணியாளர்களுக்கு பேச்சில் நிதானமும், செயலில் கவனமும் தேவை.

**சிம்மம்:** கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். நீண்ட நாளாக மனதில் இருந்து வந்த கவலை குறையும். நம்பிக்கையை அதிகரிக்கும்படியான சம்பவங்கள் நிகழும்.

**கன்னி:** குழந்தைகளின் செயற்பாடுகள் உங்களுக்கு நிம்மதி தரும். மருத்துவச் செலவு செய்ய நேரிடும். இருந்தாலும் அதை சமாளிப்பீர்கள். இதுவரை இருந்து வந்த அலைச்சல், மனஅழுத்தம் தீரும்.

**துலாம்:** குடும்பத்தில் பொருளாதார நிலை அமோகமாக இருக்கும். நிதி நெருக்கடி நீங்கும். பேச்சினால் சிரமம் வராமல் கவனம் தேவை. சுபநிகழ்ச்சி பற்றிய முயற்சிகளில் சிந்தித்து செயற்படுவது நல்லது.

**விருச்சிகம்:** உறவினர்கள் வழியில் அனுகூலம் உண்டாகும். பண வரவு அதிகரிக்கும். நண்பர் சந்திப்பு சந்தோஷம் தரும். பயணத்தால் நன்மை ஏற்படும். பலகாலத் தடை ஒன்று நீங்கும்.

**தனுசு:** நீங்கள் பல காலமாக ஆசைப்பட்ட பொருள் வீடு வந்து சேரும். பொருளாதாரம் சார்ந்த விஷயங்களில் கவனத்துடன் செயற்படுவீர்கள். வந்த வாய்ப்பை நழுவ விடாமல் பிடித்துக் கொள்ளுங்கள்.

**மகரம்:** இன்று பெரிய அளவிலான முதலீடுகள் செய்வதை தவிர்க்கவும். பணியிடத்தில் பொறுப்பாக செயற்பட்டு பரிசும், பாராட்டும் பெறுவீர்கள். ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது. மனமும், உடலும் ஆரோக்கியமாக இருக்கும். தந்தை உதவி செய்வார். உணவு விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

**மீனம்:** சோர்வுடன் உள்ளதாக நீங்களாக கற்பனை செய்து கொள்ள வேண்டாம். இன்று வளமான நாளாக அமையும். பொறுமை தேவை. கூடுதலாக உழைத்து பாராட்டு, பரிசுகளை பெறுவீர்கள். தெய்வ வழிபாடு நன்மை தரும்.

# பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்ட பதாகை அறுப்பு!

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், ஸ்ரீலங்காவின் சுதந்திரதினம் தமிழர் தேசத்தின் கரிநாள்' என்று காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகை அறுத்தெறியப்பட்டதால் அந்தப்பகுதியில் நேற்றுப் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.


குறித்த பதாகை கட்டப்பட்டதை அடுத்து நேற்று மாலை 5 மணியளவில் புலனாய்வாளர்கள் அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தனர். இரவு 7.30 மணியளவில் கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகைதந்து, அந்தப் பதாகையை அகற்றினர். இதையடுத்து, மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. 'பதாகை வேண்டுமென்றால், கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு வந்து அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று பொலிஸார் மாணவர்களிடம் தெரிவித்துவிட்டு அங்கிருந்து சென்றனர்.

(ம-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
02 . 09 . 1950

மறைவு
06 . 01 . 2022

கடந்த (06.01.2022) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் இராசையா தெய்வேந்திரன்

(உரிமையாளர் இந்திரன் ஜுவலர்ஸ்)

எங்கள் காவல் தெய்வமே...
நீங்கள் நீங்கினாலும் உங்கள்
நினைவுகள் என்னும் பெருங்கடலில் கரைசேர
இயலாமல் நாங்கள் தவிக்கின்றோம்
கனவுகள் பல இருந்தும் எம் நிகழ்கால நிலையை
எண்ணி வருந்தி தனிமையோடு
தடுமாறி தவிக்கின்றோம்.
வாழ் நாள் முழுவதும்
கண்ணீர் கடலில்.

நினைவுகளுடன்....
குடும்பத்தினர்

மீனாட்சி அம்மன் கோவில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.



பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மாதாந்தக் கலை விழாவின் காட்சிகள் (ய)





பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தின் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யும் திட்டத்தில் காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகமும், இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகமும் இணைந்து, பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த 25 ஆம் திகதி மரக்கன்றுகளை நடுகை செய்தனர்.

அத்துடன் பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் லயன்.கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன், மரக்கன்றுகளை பாடசாலை அதிபர் லயன் குணசிங்கம் லெலின்குமாரிடம் வழங்கினார். (ரி1,9)





சாவக்ச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஈ-கல்வி நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கான நிதியுதவியை கல்லூரியின் பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தினர் வழங்கினர். (ரி1,159)



இளவாலை பெரியவிளான் சிகரம் அமையத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, பெரியவிளான் சிகரம் அமையத்தால் குருதிக்கொடை முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பெரியவிளானில் இடம்பெற்றது.

இதில், சிகரம் அமையத்தின் உறுப்பினர்கள், யாழ். பல்கலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி1,125)



முழங்காவில் மகா வித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டன.

தாயக விருட்சம் அமைப்பின் ஸ்தாபகர் எஸ்.ஜீவனின் 80 ஆயிரம் ரூபா நிதியுதவியில், மாணவர்களின் நாளாந்தப் பயிற்சிகள் மற்றும் மைதான பராமரிப்பு ஆகியவற்றுக்காக உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி1,13)



திருகோணமலை சாம்பல்தீவு சல்லி கிராமப் பகுதியில் உள்ள பொருண்மியம் நலிந்த 50 குடும்பங்களுக்கு, ஒரு லட்சம் ரூபா நிதியில், உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் யாழ். தீவகம்,சரவணையை சேர்ந்த விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்தலில், பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளான செயலாளர் ந.விந்தன் கனகரட்ணம், அறக்கட்டளையின் திருமலை செயற்பாட்டாளர் தர்ஷினி தலைமையில், திருமலை பௌதிகவியல் பிரபல ஆசிரியர் ப.நித்தியானந்தம், சமூக சேவையாளர்களான அருண், உமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு உலர் உணவுப்பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கினர். (ரி1,50)



கிளிநொச்சி- பளை- தர்மக்கேணியை சேர்ந்த 'பொருண்மியம் நலிந்த' மாணவிக்கு சைக்கிளும் பாடசாலை உபகரணங்களும் ஜேர்மன் நாட்டுப் பெண்மணி கரோலினாவின் நிதியுதவியில், பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் வழங்கினார். (ரி1,13)



அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் சைவசமயப் பரீட்சை அண்மையில் நடத்தப்பட்டது. (ம-ரி1)







வவுனியாவில் இரண்டாம் மொழி சிங்களம் கற்றலைப் பூர்த்தி செய்த 12 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நகரசபை நகர மண்டபத்தில் சிங்கள பாடநெறி ஆசிரியை அ.புஸ்பமலர் தலைமையில் இடம்பெற்றது. அத்துடன் மாணவர்களின் கற்றல் ஆற்றலை வெளிப்படுத்திய கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**குமாரசாமி சரஸ்வதி**

திதி : (05.02.2022)

தோற்றம் 03.05.1933 — மறைவு 30.01.2021

அன்பின் அம்மாவே
பாசத்தின் பாசறையே
நேசத்தின் நிறைவிடமே
காத்தலின் காப்பிடமே
ஆண்டுகள் பல கடந்தாலும்
நிலைக்கும் உங்கள் நினைவுகள்

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
புளியங்கூடல் வடக்கு
ஊர்காவற்றுறை

(CS 18365)(3/6)

## FULL - STACK WEB DEVELOPMENT

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா? அல்லது ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்க வேண்டுமா?

காலம் : 6 மாதங்கள்
தகைமை : க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி இருத்தல்
மொழி மூலம் : தமிழ்

**விண்ணப்ப முடிவுத்திகதி 09.02.2022**



ŪKI

விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ள www.uki.life என்ற இணையத்தளத்தினை பார்வையிடவும்.

மேலதிக தகவல்களுக்கு

www.uki.life info@uki.life 077 569 4587

(CS 42581)(3/6)

# மன்னிப்புக் கோரல்

33/4 பிரதான வீதி வட்டவலை முகவரியில் வசிக்கும் **எஸ். தினேஷ் அடையாள அட்டை இலக்கம் 790532767V ஆகிய எனக்கு கல்கிசை நீதவான் நீதி மன்றத்தில் வழக்கு இல. 4473(B/12/19)** இன் கீழ் கௌரவ நீதவான் அவர்களால் 2015 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க மருத்துவ உரிமம் இல்லாததால் கட்டுப்பாட்டு அதிகார சபை சட்டத்தின் கீழ் 20,000/= தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது. எனவே நான் இனி மேல் இவ்வாறான தவறை செய்யமாட்டேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சகல மக்களுக்கும் தெரியப்படுவத்துவதோடு நான் மன்னிப்புக் கோருகின்றேன்.

**சோமசுந்தரம் தினேஷ்**
**790532767V**
**பிரதான வீதி, வட்டவலை.**

(ACO 18151)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 5

பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நாளை நடைபெறவிருந்த 200ஆவது ஆண்டு விழாக் குழுத் தெரிவுக் கலந்துரையாடல், தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. அதற்கமைவாக எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறும் என்று பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ-ரி1)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

மாதகல், கூடல் விளாத்தி ஸ்ரீ சாந்தநாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர தேவஸ்தானத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதால் அடியவர்களை கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ரி-1)


## துயர் பகிர்கின்றோம்



யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் முன்னைநாள் செயலாளர் மதிப்பிற்குரிய

**இராமலிங்கம் சபேசன்**

காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர் சபையினரும், செயலாளரும், நிர்வாகத்தினரும் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் 530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(CS 18373)1-6

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

(05.02.2022)



கடந்த (05.01.2022) அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு

**அமரர் இளையதம்பி திருமேனி**

(ஓய்வுநிலை செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை)

காலனின் காலக் கொடுமையின்
காரணத்தை நாம் அறியோம்
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உந்தன் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மறைந்தும் எம் மனங்களில்
மலர்ந்திருக்கும் திருவுருவே
நினைவே எம் மனதெலாம்
நித்தமும் உங்கள் நினைவில்..........

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

**குடும்பத்தினர்**

(cs.37517) (2.6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 12 . 1968 — மறைவு 04 . 02 . 2022

**அகத்தியர் மகேந்திரராசா**

சாவகச்சேரி கற்குழி வடக்கைப் பிறப்பிடமாகவும் கற்குளி 1 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட அகத்தியர் மகேந்திரராசா நேற்று (04.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அகத்தியர் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான வின்சென் - மதலேனம் தம்பதியரின் அன்பு மருமகனும். அனற்மேரி (ரஜனி)யின் அன்புக் கணவரும். கனனின் அன்புத் தந்தையும். ஆனந்தராசா. சுபத்திரா. சுபேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் றாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குளி 1ஆம் ஒழுங்கை,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
077 926 6741
076 337 9022

(cs.18204) (2.6)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 31 . 07 . 2002 — இறப்பு 09 . 01 . 2022

கடந்த (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் சப்தமி திதியிலும் இறைபதமெய்திய எங்கள் ஆருயிர்ச் செல்வன்

**அமரர் பூபாலசிங்கம் சாருஜன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (08.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தியறிந்து பல வழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோர்களுக்கும் மேலும் மரணச்சடங்கில் கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தனிப்பட்ட ரீதியில் நன்றி தெரிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்.**

காளிகோவிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

(cs.18355) (2.6)

குடும்பத்தினர்
076 726 5986

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 . 01 . 1953 — இறப்பு 01 . 02 . 2022

**திரு.கந்தையா நவரத்தினம்**

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினம் கடந்த (01.02.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும். லீலாவதியின் அன்புக் கணவரும். நந்தினி. சுபந்தினி. ஜெகதினி. நவநீதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். பவானந்தன். மனோறஞ்சன். ஜெயகேசவன் ஆகியோரின் பாசமிகு மாமாவும். அபிராமி. கஜானா, ராகவி. சதுஷன். ஹறிஸ். டன்சிகா. லிசிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
077 583 5644


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்ளஸ்...

தேவையில்லை. அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று தெரிவித்தார் ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்திரமுல்ல சீலரத்ன தேரர்.
கடந்த நான்கு நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களைச் சந்தித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
வடக்கில் மீனவர்கள் சுதந்திரமாக மீன் பிடிப்பதற்குப் போராட்டம் செய்கின்றார்கள். ஆனால், தென்னிலங்கையின் ஜனாதிபதி, பிரதமர், ஏனைய அரசியல்வாதிகள் சுதந்திரதினத்தைக் கொண்டாடுகின்றனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுக்கு எந்தத் தீர்வையும் வழங்க முடியாத ஒரு கைப்பொம்மையாகக் காணப்படுகின்றார். மீனவர்களை வீதியில் நிறுத்திவிட்டு அவர் தற்பொழுது 'பேச்சு நடத்துவேன், இந்திய மீனவர்க ளைப் பிடிப்பேன், கைப்பற்றப்பட்ட இந்தியப் படகுகளைப் பெயிண்ட் அடித்துத் தருவேன்'என பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, மீண்டும் மீண்டும் மீனவர்களை ஏமாற்றுகின்றார். அவரது கருத்தை நம்ப நாங்கள் தயாரில்லை. அமைச்சர் டக்ளஸ் உடனடியாகப் பதவிவிலக வேண்டும் -என்றார் .

(அ-ம-23)

# கொடிகாமத்தில் விபத்து முதியவர் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 5
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். வரணியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை தவமணி (வயது -71) என்ற நபரே உயிரிழந்தவர்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
கொடிகாமம் -பருத்தித்துறை வீதியில் நேற்றுக் காலை குறித்த முதியவரை மோட்டார்சைக்கிள் ஒன்று மோதித்தள்ளியுள்ளது. இதையடுத்து குறித்த முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.
மோட்டார்சைக்கிளின் சாரதியும் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-125)

**பணிப்பெண் தேவை**
திருநெல்வேலியில் வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 802 9725

**தேவை**
சிகை அலங்கரிப்பு நிலையத் திற்கு அனுபவமிக்க வேலையாட்கள் (ஆண்கள்) தேவை.
(CS 18352) (3/6) 076 280 6356

**பணிப்பெண் தேவை**
ஆரம்ப கால திருமண சேவைக்கு பணிப்பெண் தேவை. மோட்டார் வாகனம் உள்ளவர்கள். சுன்னாகம், மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் வசிப் பவர்கள் விரும் பத்தக்கது.
எம்மிடம் வெளிநாடு உள்ளாட்டு மணமக்கள் உள்ளன.
(CS 18358) (3/6) 076 704 2986

கடலுக்குள்...

இருவரின் சாவுக்கு நீதி கோரியும் ஐந்தாவது நாளான நேற்றைய தினமும் வடமராட்சி மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
கடந்த 31ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமைவரை பருத்தித்துறை- பொன்னாலை வீதியை வழிமறித்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், பொதுமக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுகின்றமை, கொரோனா அபாய நிலைமை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் போராட்டத்துக்குத் தடையுத்தரவு பெறப்பட்டது. இந்த நிலையிலேயே பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் போராட்ட வடிவத்தை மாற்றி, வீதிமறியல் போராட்டத்தைக் கைவிட்டு கடலுக்குள் இறங்கி கறுப்புக் கொடிகளையும், மெழுகுவர்த்திகளையும் ஏந்தியவாறு மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ம-26)

**WANT TO BE A PART OF OUR DYNAMIC TEAM**
**Thinnai Organic Farm**
**JOB VACANCIES AVAILABLE FOR**

**Kitchen (Male)**
❖ Helper ❖ Steward
**Food And Beverage Service (Male/Female)**
❖ Supervisor ❖ Senior Steward ❖ Steward
**House Keeping (Male)**
❖ Room Attendant
**OBT (Male / Female)**
❖ OBT Trainers ❖ OBT Supervisor

Applicants From Currently Based in Jaffna Would Be An Added Advantage.
If the following describes you and if you like to take on this Challenging role and grow with us send us your detailed within 14 Days.
**Jopex @thinnaiorganic.com**
**T.P : 076 389 4995**

**வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் நடமாடும் சேவை**

எதிர்வரும் 2022.02.08 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச சபையில் பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் அமைச்சின் சேவைகளை வழங்குவதற்காகவும் பின்வரும் துறைகளை உள்ளடக்கியதாக நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. எனவே பொதுமக்கள் இந்த நடமாடும் சேவையில் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. உள்ளூராட்சித் திணைக்களம் தொடர்பானவை
2. வீட்டுத்திட்டம் தொடர்பானவை
3. சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பானவை
4. வீதி அபிவிருத்தி திணைக்களம் தொடர்பானவை
5. காணி நிர்வாகம் தொடர்பானவை
6. கிராம அபிவிருத்தி தொடர்பானவை
7. மோட்டார் போக்குவரத்து தொடர்பானவை
8. வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தொடர்பானவை

இ.இளங்கோவன்
செயலாளர்.
(CR 37498)(3/6)




**இணுவில் திருவருள் மிகு**
**ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய**
புனராவர்த்தன அஷ்ட பந்தன நிகமொக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**நாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை திருமுழுக்குத் திருமுகம்**

06.02.2022 காலை 8.00 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிரதட் சிணம் 8.47 இற்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீன லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம்.

விநாயகர் அடியார்கள்.
(CR 37435) (3/6)

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



தோற்றம் 24.03.1939 — மறைவு 06.01.2022

கடந்த 06.01.2022 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு
**அமரர் கதிரவேலு ஆறுமுகம்**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (03.02.2022) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.02.2022) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"ஆனந்த பவனம்"
இல. 147C பிரதான வீதி
(சந்தை அருகாமை)
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.
077 925 4914
(CS 18381) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வடக்கு- கிழக்கு சிவில் சமூக அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை சர்வதேசத்திடம் கோரி இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில், நினைவுச் சுடரை ஏற்றிய பின்னர் தீப்பந்தங்களுடன் கவனவீர்ப்புப் பேரணி ஆரம்பமானது. வட்டுவாகல் கோத்தாபய கடற்படைத் தளத்தின் முன்னால் நின்று நீண்டநேரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் குரலெழுப்பினார்கள். 'இந்தப் பாலத்தின் ஊடாகவே 2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது எமது பிள்ளைகளை, கணவனை, உறவுகளை ஒப்படைத்தோம். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அரசும் சர்வதேசமும் வெளிப்படுத்த வேண்டும்' என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்ட பேரணி, செல்வபுரம் புனித யூதா தேவாலயத்தில் முடிவடைந்தது. வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதிகள், மதகுருக்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர், மாதர் சங்கத்தினர், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் போராட்டத்திலும் பேரணியிலும் கலந்துகொண்டனர். (அ -ம-125,19)

## தமிழர்களின்...

ஏற்றப்படவேண்டும் என்று முள்ளிவாய்க்கால் மண்ணில் நேற்றுப் பிரகடனம் செய்யப்பட்டது. இலங்கையின் சுதந்திரதினத்தை கரிநாளாக அறிவித்து, காணாமல் ஆக்கப்பட்ட உணவுகளாலும் வடக்கு -கிழக்கு சிவில் சமூக அமைப்புகளாலும் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரகடனத்திலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது. அந்தப் பிரகடனத்தில் மேலும் உள்ளதாவது:

இன்றைய தினம் (நேற்று) பிரிட்டிஷார் 74 வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கு சுதந்திரம் அளித்துச் சென்ற நாள். ஆனால், அந்த நாளை சிங்கள தேசம் தனக்கு மட்டுமே சுதந்திர நாளாக்கி, தமிழ் இனத்தை அடிமைப்படுத்தி, அதைத் தமிழருக்கான கரிநாள் ஆக்கியது. காலங்காலமாக இது தொடர்கின்றது. அதற்கு எதிராகக் கதைப்பவர்களும், செயற்பட்டவர்களும் குண்டாந்தடியால் அடிக்கப்பட்டனர்.

அடக்கு முறைகளின் ஒரு கட்டமாக 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தை அரசு பிரகடனப்படுத்தியது. சிங்களம் படிக்காத அரச உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இந்த அநீதிகள் அரங்கேறிய அதேநேரம், தலைநகர் கொழும்பில் தமிழர்கள் மீது இனஅழிப்பு கட்டவிழ்த்து விடப் பட்டது. தமிழர்கள் முதுகில் சிங்கள 'ஸ்ரீ' சூடுவைக்கப்பட்து. பச்சைக் குழந்தைகள், வயோதிபர்கள் என்ற வித்தியாசம் இன்றி, கொதிக்கும் தார்ப் பீப்பாய்கள், தோசைக்கல் என்பவற்றில் அவர்கள் போடப்பட்டனர்.

இந்த அவலம்போல காலத்துக்கு காலம் எங்காவது ஒரு மூலையில், தமிழர்கள் உரிமைக்காக குரல் கொடுக்கும் போதெல்லாம் இன அழிப்பு என்னும் பயங்கரத்தை மேற்கொண்டு தமிழர்களின் உணர்வு அழிக்கப்பட்டது.

மேற்படி எல்லாத் தடைகளையும் தாண்டி, மக்களின் பேராதரவுடன் மேற்கொள்ளப்பட்ட தாயக விடுதலைப் போராட்டம்கூட 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இதே முள்ளிவாய்க்காலில் மௌனிக்கச் செய்யப்பட்டது. இதே இடத்தில் தான் எமது உறவுகளை அரச படைகளிடம் கையளித்துவிட்டு, எம் உறவுகளைத் தேடி வயோதிபர்களாகிய நாம் போராடி வருகின்றோம். எமது உறவுகளைத் தேடும் எமது போராட்டமானது, வெறுமனே உறவுகளைத் தேடும் போராட்டம் அன்று, எமக்கான உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்துக்கான தொடக்கப் புள்ளியே இது.

எமது உறவுகளுடன் வாழும் உரிமைக்காக, அவர்களுக்கு என்ன நடந்தது என்று உண்மையை அறியும் உரிமைக்காக, அவர்களை காணாமல் ஆக்கியவர்களை நீதியின் முன் நிறுத்தியே தீர வேண்டும் என்ற எம் உணர்வுக்கான போராட்டமே இது. இந்தப் போராட்ட நெருப்பானது, தமிழ் உணர்வாளர்கள், பற்றுள்ளவர்கள் அனைவராலும் வளர்ப்பிக்கப்பட்டு, பெரும் நெருப்பாக தமிழர்கள் நெஞ்சிலே ஏற்றப்பட வேண்டும்.

தமிழ் தேசிய இனம் என்ற கௌரவத்துடன் தமிழர்கள் வாழ வழி செய்யப்பட வேண்டும். அற்பசொற்ப சலுகைகளுக்காகவும், தம் சொந்த ஆசாபாசங்களுக்காகவும், சிங்கள அரசுக்கு துணை போனவர்களும், அவர்களுடன் சேர்ந்து இருப்பவர்களும் தம் இனத்துக்கு துரோகம் செய்வதை உணர்ந்து திருந்த வேண்டும் அல்லது மக்கள் போராட்டம் அவர்களைத் திருத்த வேண்டும்.

போதைப் பாவனை தமிழர்களிடையே திட்டமிட்டுப் புகுத்தப்பட்டு கலாசாரப் பிறழ்வுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்தப் புனிதமான இடத்திலே நாம் அனைவரும் சாதி, மத பேதங்களை மறந்து தமிழராக ஒன்றிணைவோம், தமிழினத்தின் உரிமைக்காக ஒன்றாகப் பயணிப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோமாக - என்றுள்ளது. (அ-ம-7)

## குருந்தூர்மலையில்...

லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைக்கு தடையை மீறி உள்நுழைவுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளைக்கு முரணாக கட்டப்படுகின்ற கட்டடங்களைப் பார்வையிட்டதுடன், அங்கு ஆதி ஐயனார் திரிசூலம் இருந்த இடத்தில் வழிபாடுகளும் கூட்டமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், இரா. சாணக்கியன் . முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுரேன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ஜீவன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் ஆகியோருடன் பொதுமக்களும் குருந்தூர் மலைக்குப் பயணம் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-246)

## தடுப்பூசி...

னர் பொது இடங்களுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஒமிக்ரோன் தொற்று நாட்டில் தற்போது தீவிரமாகப் பரவி வருகின்றது. பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசித் திட்டங்களை அரசு அறிமுகப்படுத்தியுள்ள போதிலும் அதைப் பெற்றுக்கொள்வதில் மக்களுக்கு ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலையிலேயே அனைவரும் தடுப்பூசி பெறுவதைக் கட்டாயமாக்கும் வகையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதியின் பின்னர் தடுப்பூசி பெறாதவர்கள் பொது இடங்களுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கும் வகையில், வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. (அ-ம)

## மைதானத்தில்...

திர தின நிகழ்வில் சுமார் 20 பேர் வரையில் மயக்கமடைந்து வீழ்ந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றன. நிகழ்வின் அணிநடையில் கலந்து கொள்ள வந்த மாணவர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர் உட்பட 20 பேரே இவ்வாறு மயக்கமடைந்தனர். அதிகநேரம் வெயிலில் நின்றமையால் அவர்கள் மயக்கமடைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

மயக்கமடைந்தவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்பட்டன. (அ-ம,110)

## ஜனாதிபதி....

ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிடுவேன் என்று தெரிவித்தார் ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்திரமுல்ல சீலரத்ன தேரர். வடமாகாண மீனவர்கள் முன்னெடுக்கும் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு இந்த அரசாங்கம் எப்பொழுதுமே நிரந்தரமான தீர்வினைக் காணாது. அது எங்களுக்கு இன்று நேற்றுத் தெரிந்த விடயம் அல்ல. ஏனென்றால் அவர்கள் இந்தியாவிடம் பிச்சை எடுக்கின்றார்கள். இந்தியாவைப் பகைத்துக்கொண்டு அவர்களால் எதையும் செய்ய முடியாது. உடனடியாக இந்திய- இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு கொடுக்காவிட்டால், இந்த மீனவர்களையும் அழைத்துக்கொண்டு நான் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிடுவேன். எனது ஒத்துழைப்பு எப்பொழுதும் இந்த மீனவர்களுக்கு இருக்கும்-என்றார். (ம-23)

## ஒற்றையாட்சியை...

பேன். எமது நாட்டின் ஒற்றையாட்சி, ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமையைப் பாதுகாப்பேன். ஜனாதிபதி என்ற வகையில் நான் உறுதியளித்துள்ளேன். அந்த உறுதியுரையை எப்போதுமே பாதுகாப்பேன் இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இலங்கையின் 74ஆவது சுதந்திர நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் பங்கேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவரது நீண்ட உரையின் முக்கியமான விடயங்கள் வருமாறு

**[illegible] சுதந்திரம் ஏராளம்**

இனம், மதம் என்ற எவ்வித பேதங்களுமின்றி ஒவ்வோர் இலங்கைப் பிரஜைக்கும் இன்று நாட்டின் எந்தப்பிரதேசத்திலும் சுதந்திரமாகவும் பாதுகாப்புடன் வாழும் உரிமையுண்டு. தாம் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கான சுதந்திரமும் உள்ளது. அபிப்பிராயங்களைச் சுயாதீனமாக முன்வைப்பதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. நாட்டினுள் முழுமையாக ஊடகச் சுதந்திரம் இருக்கின்றது. இலங்கைப் பிரஜைகள் பரிபூரணமாக ஜனநாயக முறைமையொன்றினூடாகத் தத்தமது மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்கும் விரும்பியவர்கள் அரசியல் செயற்பாட்டினூடாக அரச ஆட்சியில் சம்பந்தப்படுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. இது, எம் அனைவரது மகிழ்ச்சிக்கும் அபிமானத்துக்கும் உரியதொரு காரணமாகும். சுதந்திரமிக்க ஜனநாயக ரீதியிலான நாடொன்றின் மக்கள் என்ற வகையில், நாம் எல்லோருக்கும் சிறப்புரிமைகள் இருப்பது போன்று பொறுப்புகளும் இருக்கின்றன.

**எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது**

ஒரு நாட்டை உரிய திசையை நோக்கிக் கொண்டுசெல்லும்போது, அதற்காக நாட்டின் அனைவரது உதவியையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம். மாற்றமடையாதோருக்காகக் காத்திருந்து நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்காக நாம் திட்டமிட்டுள்ளவற்றைக் கைவிட நாம் தயாரில்லை. எமது நோக்கமானது நாடு என்ற அடிப்படையில் சரியானதைச் செய்வதே தவிர எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல.

**பொய்ப் பரப்புரை**

தேசிய தலைமைத்துவத்துக்கு எதிரான சக்திகள் மிகச் சூட்சுமமான பல பொய்ப் பரப்புரைகள் ஊடாக மக்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்ல முயல்கின்றன. எப்போதும் மதிநுட்பத்துடன் நடந்து கொள்ளுமாறு இந்தநாட்டு மக்களை நான் கேட்டுக் கொள்கின்றேன். தரவுகளின் அடிப்படையில் விடயங்களை ஆராய்ந்துப் பார்த்து உண்மையை அறிந்து கொண்டு தீர்மானங்களை எடுப்பதாயின், ஒருவராலும் மக்களைத் தவறான பாதையில் கொண்டுசெல்ல முடியாது.

**மனித உரிமை மீறல் நடக்கவேயில்லை**

கடந்த காலத்தில் பல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி அழிந்து கொண்டிருந்த தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்களைப் பாதுகாத்து அவற்றை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

எமது நாடு சட்ட ஆதிக்கத்தைப் பாதுகாக்கும், சர்வதேச சமவாயங்களை மதிக்கும் நடொன்றாகும். குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்குப் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்கு ஏதேனுமொரு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டபோதும், எவ்விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு உடந்தையாக இருக்கவில்லை என்பதுடன், எதிர்காலத்திலும் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படவும் மாட்டாது. எந்தக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் இந்நாட்டில் அடிப்படைவாதம் தலைதூக்க நாம் இடமளிக்க மாட்டோம். இந்த அரசு மக்களுக்கு உறுதியளித்த அதே விதத்தில் தேசிய பாதுகாப்பை உறுதி செய்துள்ளது என்றார். (அ-ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணவீக்கத்தால் நாட்டில் கடும் உணவு நெருக்கடி

## கொழும்பு பல்கலைக்கழகம் எச்சரிக்கை

**கொழும்பு, பெப். 5**

**நாட்டில் அதிகரித்துவரும் பணவீக்கத்தால், கடுமையான உணவு நெருக்கடி ஏற்படும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலாநிதி பிரியங்கா துனுசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாங்கும் திறன் வேகமாகக் குறைந்து வருகின்றது. இதன் ஊடாக வறுமை, போஷாக்கின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்படும். அவர்கள் தங்கள் வருமானத்தில் சுமார் 50 வீதத்தை உணவுக்காகச் செலவிடுகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் விலையேற்றம் ஒருவகையில் குறைந்த உணவை உட்கொள்ள வழிவகுக்கும். அத்துடன் உணவு அல்லாத விடயங்களுக்கான செலவுகளைக் குறைக்க வேண்டிஏற்படும். இதன் காரணமாக மோசமான சூழ்நிலை நீடிக்கும் -என்றார். (ம-4-இ)

# வெளிநாட்டு பணமோசடி: இருவர் கைது

கொழும்பு, பெப். 5

சுமார் 11 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு பணமோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை டுபாய் நோக்கி புறப்பட்டுச் செல்ல முயன்றபோதே பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் பயணப்பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 46 ஆயிரம் யூரோ இதன்போது சுங்கப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

# கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு, பெப். 5

கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களான சமன் அபேகுணவர்த்தன மற்றும் சுரேகா அபேகுணவர்த்தன ஆகியோரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர் பிரதீப் ஜயவர்தனவை மிளகாய்த்தூள் கலந்த கழி முட்டையால் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மாணவர்கள் மீது தாக்குதல் விசாரணைக்கு இரு குழுக்கள்

ராகம மருத்துவ பீட விடுதியில், மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு இரண்டு விசேட புலனாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் பணிப்புரைக்கு அமைவாக, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார். சம்பவம் தொடர்பில் அரச நிறுவனமொன்றுக்குச் சொந்தமான வாகனத்துடன், அதன் சாரதி ராகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். தாக்குதலில் காயமடைந்த 3 பல்கலைக்கழக மாணவர்கள் ராகம போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்(ம-4-இ)



# ஆடை உற்பத்திகள்: ரஷ்யாவுடன் பேச்சு

கொழும்பு, பெப். 5

ரஷ்ய அருங்காட்சியகங்கள் மற்றும் காட்சிக் கூடங்களில் இலங்கை ஆடைகளைக் காட்சிப்படுத்தல் மற்றும் ரஷ்ய உற்பத்திகளை இலங்கையிலும் உற்பத்தி செய்தல் தொடர்பில் இரு தரப்பினருக்கிடையில் கலந்துரையாடப்பட்டது. பற்றிக், கைத்தறி மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகளுக்கான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான தூதுக்குழுவினர், ரஷ்ய சர்வதேச ஒத்துழைப்பு சங்கத்துக்குச் சென்றனர். இதன்போது தூதுக்குழுவினரை ரஷ்யா-இலங்கை நட்புறவுச் சங்கத்தின் துணைத் தலைவர் விளாடிமிர் பொலோஸ்கோவ் மற்றும் சபை உறுப்பினர் திருமதி மெரினா கொரோஸ்டெலேவா ஆகியோர் வரவேற்றனர்.

இதன்போது பற்றிக், கைத்தறி மற்றும் ஏனைய ஆடைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில், இராஜாங்க அமைச்சர் விளக்கமளித்தார்.

ஆடைத்துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான பரஸ்பரக் கருத்துக்களை இதன்போது இரு தரப்பினரும் பரிமாறிக்கொண்டனர். (ம-4-இ)

# நிபுணர்களின் உதவியுடன் நாட்டின் அபிவிருத்திகள்

## பிரதமர் ஆலோசனை

நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை, நிபுணர்களின் உதவியுடன் மேற்பார்வை செய்வது அவசியம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இலங்கை தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேற்று முன்தினம் சந்தித்தனர். தொழில் வல்லுநர்கள் சங்கத்தில் 52 தொழிற்சங்கங்கள் உள்ளன. அரசு முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு, நிபுணர்களின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தயாராகவுள்ளோம் என்று தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் துலித் பெரேரா தெரிவித்தார். அமைச்சர்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்திக்காகச் செயற்படுமாறு நிபுணர்களைக் கேட்டுக் கொண்டார். (ம-4-இ)

**அலுவலக கிளாக் தேவை**

யாழ் நகரில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)

077 5555 100

**English Classes**

Gr-1 to O/L

வீடு வந்து கற்பிக்கப்படும்.

Grammar and Syllabus

T.P: 077 3314 608

**பணிப்பெண் தேவை**

யாழ் அளவெட்டி பகுதியில் வீட்டில் தங்கிநின்று வீட்டு வேலைகள் செய்வதற்குப் பணிப்பெண் தேவை.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ள:

077 3640 579

**பெண் உதவியாளர் தேவை**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பல் மூக்குக் கண்ணாடியகத்திற்கு பெண் உதவியாளர் தேவை. தகைமை (O/L) யாழ். மாநகரசபை எல்லைக்குள் உட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் (CS 18342) (3/6)

021 222 7893, 077 420 7442

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தைமேனி 30 பரப்புக் காணி பத்து பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

1 பரப்பின் விலை - 320,000/=

15 அடி பாதையுடன் அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கொம்பனிக்கு முன் வீதி. (அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 km தூரம்

076 890 9259, 077 015 0353

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி றோட் புன்னாலை கட்டுவன் சந்தியிலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதியில் இரண்டா வது காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 20 பரப்பு விற்பனைக்கு. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 KM தூரம். நல்ல சூழல்.

1 பரப்பின் விலை 10 இலட்சம், ஒன்பது இலட்சம், எட்டு இலட்சம்.

தொடர்பு: 077 6234 204

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 14 பரப்புக்காணி (நிலப்பரப்பு) இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

A9 வீதியிலிருந்து 150m தூரம்

077 2880 152, 077 911 6983, 0766583621

**கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்கள் பெற்றுக்கொள்ளலாம்.

பிளாஸ்டிக் பொருட்கள், சில்வர் வகைகள், பாட்டா வகைகள், தையல் உபகரணங்கள், நவீன பட்டின்கள், பொம்மை வகைகள், மாஸ்க் வகைகள், சனிரேசர் வகைகள், விளையாட்டு பொருட்கள், கவரிங் நகைகள், அன்புளிப்பு பொருட்கள் இவை அனைத்தும் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

26/1, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம். 077 468 3354

உரிமையாளர் தே.கலைத்தாசன் (கரன்) சரவணபவன் பான்சி கவுஸ்

**வேலையாட்கள் தேவை**

அச்சுவேலியில் இயங்குகின்ற தொழிற்பேட்டை நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- இயந்திர இயக்குனர் (Exquder Machine Operator
- உதவியாளர் Assisstant

வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு.

(CR 37485) (3/6) 077 310 7823

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.